# சீர்திருத்த விசுவாசமும் கிருபையின் கோட்பாடுகளும்

ஆர். பாலா

REFORMED PUBLICATIONS

சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**சீர்திருத்த விசுவாசமும் கிருபையின் கோட்பாடுகளும்**

*ஆர். பாலா*

*முதல் பதிப்பு: 2014*

*கிடைக்குமிடம்:*

**சீர்திருத்த வெளியீடுகள்**
*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைப்பேசி: 9445671113*
*ஈமெயில்:* rpchennai23@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த*
*மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.org
*வலைப்பூவைப் பார்க்கவும்.*

# பொருளடக்கம்


1. முகவுரை ............................................................ 5
2. சீர்திருத்த விசுவாசம் ............................................... 9
3. கல்வினிச ஐங்கோட்பாடுகள் (கிருபையின் போதனைகள்) ........ 36
4. பதப்பொருள் விளக்கம் ............................................... 60

# முகவுரை

*தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள் மத்தியில் சீர்திருத்த விசுவாசம்* (Reformed Faith) *பரவி வரும் காலம் இது. இருண்ட காலத்தில் ரோமன் கத்தோலிக்க மதத்தின் அட்டூழியத்தினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த வேதசத்தியங்களை பாமரரும் அறிந்து ஆத்மீக விடுதலை பெற கர்த்தர் செய்த சீர்திருத்தத்தை நம் மக்களும் அறிந்து வருகிற காலமிது. மார்டின் லூத்தர்* (Martin Luther), *ஜோன் கல்வின்* (John Calvin), *ஜோன் பனியன்* (John Bunyan), *சார்ள்ஸ் ஸ்பர்ஜன்* (Charles Spurgeon) *போன்றவர்களின் பெயர்கள் இன்று பலருடைய காதுகளிலும் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன. சீர்திருத்தவாதிகள் நமக்குக் காட்டித் தந்துள்ள சீர்திருத்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு திருச்சபைகள் தோன்றி வருகின்ற ஆரம்பகாலமிது.*

*தமிழ் மக்கள் மத்தியில் சபைகளும், ஆத்துமாக்களும் சத்தியத்தை அறியாமலும், அறிந்துகொள்ள முடியாமலும் இருக்கும் இந்த இருண்ட காலத்தில் சீர்திருத்த தீபம் சுடர் விட்டு தமிழகம், ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மேலை நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்கள் மத்தியிலும் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது. ஆனால், அது இன்னும் சுட்டு விளக்கின் சிற்றொளியாக இருக்கின்றதே தவிர சூரியனின் செங்கதிர்கள்போல் தமிழுலகெங்கும் பரவி இருளகற்றும் அளவுக்கு வளர்ந்துவிடவில்லை. சுட்டு விளக்கின் சிற்றொளியானாலும், அது தலைநிமிர்ந்து தன்னை இனங்காட்டி ஒளிவீசிக்கொண்டிருக்கிறது. அது தீயாகப் பரவும் காலம் ஒருநாள் வரத்தான் செய்யும். தமிழுலகெங்கும் தன் கதிர்களை வீசி சபைகளுக்கு அது ஒளியூட்டும் நாள் நிச்சயம் வரும்.*

சீர்திருத்த தீபம் சுடர்விட்டுக் கொண்டிருக்கும் இந்த ஆரம்பக்கட்ட காலத்தில் அதனை அறிந்து கொள்ளுகிறவர்கள் அதன் போதனைகளை சரியாக விளங்கிக்கொள்ளுவது அவசியம். “முதல் கோணினால் முற்றும் கோணும்” என்பது தமிழ்ப் பழமொழி. பதினாறாம் நூற்றாண்டு சீர்திருத்தவாத காலத்திலும்கூட சீர்திருத்தப் போதனைகளை முழுமையாக விளங்கிக்கொள்ளாமல் வழிதவறிப் போனவர்கள் இருந்திருக்கிறார்கள். ஜெபத்தோடும், பொறுமையோடும் மிகுந்த மனத்தாழ்மையோடும் இந்த சத்தியங்களை விளங்கிக்கொண்டு இன்று நாம் சபை சீர்திருத்தத்தில் ஈடுபடவேண்டிய கடமைப்பாடுடையவர்களாயிருக்கிறோம். இதன் காரணமாகத்தான் சீர்திருத்த விசுவாசத்தைக் குறித்த இந்த நூல் எழுதி வெளியிடப்படுகிறது. இந்நூலின் முக்கிய நோக்கம் சீர்திருத்தக் கோட்பாடுகள் பற்றிக் காணப்படும் ஒரு தவறான எண்ணத்தை வெளிப்படுத்தி அதைத் திருத்துவதுதான். அதாவது, கல்வினிச ஐங்கோட்பாடுகள் (The Five Points of Calvinism) சீர்திருத்த விசுவாசத்தின் இரட்சிப்பைப் பற்றிய ஓர் அடிப்படை போதனை மட்டுமே தவிர, அதுவே சீர்திருத்த விசுவாசமாகிவிடாது என்பதுதான் அது.

இந்த உண்மையை வலியுறுத்த வேண்டிய அவசியமென்ன என்று கேட்பீர்கள். முதலில், நம்மினத்தில் சீர்திருத்த விசுவாசத்தை சரியாகப் புரிந்துகொள்ளாததால் இத்தகைய தவறான எண்ணத்தைக் கொண்டிருப்பவர்களுக்கு உண்மையை விளக்க வேண்டுமென்பது என் நோக்கம். இரண்டாவது. சீர்திருத்த விசுவாசத்தை முதல் முதல் அறிந்துகொள்ளுகிறவர்கள் அதைச் சரியாக விளங்கிக்கொள்ள உதவவேண்டுமென்பது அடுத்த நோக்கம். மூன்றாவதாக, மேலைத்தேய நாடுகளில் கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்குள் ஏற்பட்டுள்ள இந்த விஷயம் சம்பந்தமான தவறான போக்குகளை இனங்காட்டி அத்தகைய ஆபத்தான சிந்தனைப் போக்கிற்கு எவரும் இடங்கொடுத்துவிடாமல் இருக்க உதவுவதும் என் நோக்கமாக இருக்கின்றது.

கல்வினிச ஐங்கோட்பாடுகளை மட்டும் சீர்திருத்த விசுவாசமாக நினைத்து அதைத் தாண்டிப்போக மறுப்பவர்கள் சீர்திருத்த விசுவாசத்தை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் கூறவேண்டும். சீர்திருத்த விசுவாசம் நமது வாழ்க்கையிலும், திருச்சபை சார்ந்த அனைத்துக் காரியங்களிலும் இருக்க வேண்டிய முழுமையான, அதேவேளை தொடர்ந்து காணப்பட

வேண்டிய வேத அடிப்படையிலான சீர்திருத்தத்தை (Continuing reformation) வலியுறுத்துகிறது.

இந்நூலின் முதலாவது ஆக்கம் திருச்சபைகளில் இன்று எல்லா விஷயங்களிலும் தொடர்ந்து காணப்பட வேண்டிய மெய்யான சீர்திருத்தத்தை வலியுறுத்துகிறது. இரண்டாவது ஆக்கம் கல்வினின் ஐங்கோட்பாடுகளைப் பற்றியது. ஐங்கோட்பாடுகள் நிச்சயம் அவசியமானதுதான்.

1. மெய்யான சுவிசேஷத்தை அறிந்து கொள்ளவும், அத்தகைய ஊழியத்தில் ஈடுபடவும் நமக்கு கல்வினின் ஐங்கோட்பாடுகள் பற்றிய அறிவு அவசியம் தேவை. வேதம் போதிக்கும் கிறிஸ்துவின் மெய்யான மீட்புப்பணி பற்றிய சத்தியங்களைக் கல்வினின் ஐங்கோட்பாடுகள் முறைப்படுத்தி விளக்குகின்றன. தன்னுடைய மக்களின் இரட்சிப்பை உலகத்தோற்றத்திற்கு முன்பாகத் திட்டமிட்டு, தன்னுடைய குமாரன் மூலம் அதை இந்த உலகில் நிறைவேற்றி, தன்னுடைய ஆவியானவரின் செயற்பாட்டின் மூலம் தன்னால் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு மறுபிறப்பைத் தருகின்ற இறையாண்மையுள்ள கர்த்தரின் மகத்தான கிருபை சம்பந்தமான போதனைகள் இவை. இவற்றிற்கு மாறான எந்தப் போதனையும் கர்த்தரை யல்லாமல் மனிதனை மேன்மைப்படுத்துவதாகவே இருக்கும்.

2. இந்தக் கிருபையின் போதனைகள் கிறிஸ்துவின் சுவிசேஷ உண்மைகளை மட்டுமல்லாது, சுவிசேஷ வாழ்க்கையைப் பற்றியும் விளக்குகின்றன. இரட்சிப்பை நமக்கு இலவசமாகத் தருகின்ற கர்த்தருடைய மகிமைக்காக நாம் மிகுந்த மனத்தாழ்மையோடும், பரிசுத்தத்துடனும் வாழவேண்டும் என்பதை கிருபையின் போதனைகள் வலியுறுத்துகின்றன.

3. இந்தக் கிருபையின் போதனைகள் நாம் சுவிசேஷ ஊழியத்தைக் கர்த்தரில் தங்கியிருந்து அவருடைய வழிப்படி அவருடைய மகிமைக்காகப் பொறுப்போடு செய்ய நம்மை வழிநடத்துகின்றன. தவறான சுவிசேஷ வழிமுறைகளைத் தவிர்த்து ஆத்தும பாரத்துடன்

*வேதவழிப்படி சுவிசேஷத்தை அறிவிக்க கல்வினின் ஐம்போதனைகள் துணைசெய்கின்றன.*

*இந்த ஐம்போதனைகள் சீர்திருத்த விசுவாசத்தின் ஓர் அங்கம்; ஆரம்பப்படி, ஆரம்பமே முடிவாகிவிடாது. ஆனால், ஆரம்பம் தெரியாமல் முடிவை நோக்கி நாம் அடியெடுத்து வைக்க முடியாது. ஐங்கோட்பாடுகளைப் பற்றி அறிந்து கொண்டிராதவர்களுக்கு அதை அறிமுகப்படுத்தும் நோக்கத்தோடு இரண்டாவது ஆக்கத்தை எழுதியிருக்கிறேன்.*

*இந்த இரண்டு ஆக்கங்களும் திருமறைத்தீபம் பத்திரிகையில் வெளிவந்து ஆத்துமாக்கள் சத்தியத்தில் மேலும் வளம்பெறவும், உரமடையவும் துணை புரிந்திருக்கின்றன. இதை நூலாக முதலில் ஸ்ரீ லங்காவில் 2006ம் ஆண்டில் 'சீர்திருத்த விசுவாசம்?' என்ற தலைப்பில் வெளியிட்டோம். பலருக்கும் இந்த ஆக்கங்கள் பயனுள்ளதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் அவற்றை மறுபடியும் புதுப்பித்தும், அவசியமான சில விஷயங்களை இணைத்தும் மீண்டும் நூலாக இந்தியாவில் புதிய தலைப்பில் வெளியிடுகிறோம். இந்நூலைக் கவனத்தோடு வாசித்து திருத்தங்கள் செய்து உதவியுள்ளவர்களுக்கும், இவ்வாக்கங்கள் நூலாக வெளிவர வேண்டும் என்று வலியுறுத்தி பல வேலைகளுக்கு மத்தியிலும் இதை வெளியிட என்னை ஊக்குவித்த நண்பர்களுக்கும் இதை இந்தியாவில் முதன் முதல் வெளியிடும் சீர்திருத்த வெளியீடுகளுக்கும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.*

**ஆர். பாலா**
**ஆக்லாந்து, நியூசிலாந்து**

# சீர்திருத்த விசுவாசம்

சீர்திருத்தவாதியான ஜோன் கல்வினைப்பற்றி (John Calvin) நிச்சயம் கேள்விப்பட்டிருப்பீர்கள். பதினாறாம் நூற்றாண்டில் எழுந்த திருச்சபை சீர்திருத்தத்தில் கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட ஒரு பெருந்தலைவர் ஜோன் கல்வின். ஜெனீவாவில் சபை நிறுவி பல்லாண்டுகள் போதக ஊழியம் செய்து வேத சத்தியங்களில் மக்களை வழி நடத்தியவர் கல்வின். திருச்சபை சீர்திருத்தத்தில் பெரும் பங்கு வகித்தவர். பிரான்ஸின் அரசனுக்கு சீர்திருத்தக் கருத்துக்களை விளக்க அவர் ஒரு துண்டுப்பிரசுரமாக எழுத ஆரம்பித்து ஒரு பெரு நூலாக முடிந்தது அவரது அழியா கிறிஸ்தவப் போதனைகள் (The Institutes of the Christian Religion). வேதத்தின் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட நூல்களுக்கு விளக்கவுரை எழுதியவர் கல்வின். கல்வினுடைய அரும்பெரும் பணிகள் இவற்றுடன் முடிந்துவிடவில்லை. சீர்திருத்த இறையியலுக்கு வடிவம் கொடுத்த சீர்திருத்தவாதிகளில் இவரும் ஒருவர்.

கல்வினின் மறைவுக்குப்பின் அவரது சீர்திருத்தப் போதனைகளை எதிர்த்து அவற்றிற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டான் ஜேம்ஸ் ஆர்மீனியஸ் (James Arminius) என்ற மனிதன். 1610ல் அவனது மறைவிற்குப்பின் அவனுடைய சீடர்கள் ஐந்து கோட்பாடுகளை வெளியிட்டு திருச்சபைகளை சீர்திருத்தப் போதனைகளுக்கு எதிராகத் திருப்ப எத்தனித்தனர். இவர்களது போதனைகள் ‘ஆர்மீனியனிசம்’ (Arminianism) என்று இன்று சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. மீட்பிலும், இரட்சிப்பிலும் மனிதனுக்குப் பெரும் பங்கு உண்டென்றும், மனிதனின் ஒத்துழைப்பு இல்லாமல் கர்த்தரால் மனிதனை மீட்க முடியாது என்றும் ஆர்மீனியஸ் போதித்தான். அக்காலத்தில் ஐரோப்பாவில்

*திருச்சபைகள் சீர்திருத்தப் போதனைகளைப் பின்பற்றி விசுவாச அறிக்கைகளையும் கொண்டு நல்லபடியாக இயங்கி வந்து கொண்டிருந்தன. இதற்கு ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது என்பதால் ஹாலந்து நாட்டில் திருச்சபைத் தலைவர்கள் இப்போதனைகளை ஆராய 1618 இல் டோர்ட் என்ற இடத்தில் ஒன்று கூடினார்கள். ஏழு மாதங்களில் 154 தடவைகள் அவர்கள் கூடி ஆர்மீனியனிசப் போதனைகளை ஆழமாக ஆராய்ந்தனர். அப்போதனைகள் வேதத்திற்கும், சீர்திருத்தப் போதனைகளுக்கும் முரணாக இருப்பதை உணர்ந்த அவர்கள் அவற்றிற்கெதிரான ஐங்கோட்பாடுகளை வெளியிட்டனர். தவறான போதனைகளை அளித்த ஆர்மீனியஸினுடைய சீடர்களும் நாடு கடத்தப்பட்டனர். திருச்சபைகள் ஆர்மீனியனிசப் போதனைகளின் ஆபத்திலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளவே அன்று கூடிய டோர்ட் கவுன்ஸில்* (Synod of Dort) *இதைச் செய்தது. இவ்வைங்கோட்பாடுகள் பின்பு கல்வினிச ஐங்கோட்பாடுகள் என்ற பெயரைப் பெற்றன. சீர்திருத்தவாதப் போதனைகள் தோன்றுவதற்கு கல்வின் அளித்த சிறப்பான பங்கினாலேயே இதற்குக் கல்வினின் பெயர் சூட்டப்பட்டது. இன்று இவ்வைங்கோட்பாடுகளைக் "கிருபையின் போதனைகள்" என்றும், இவற்றை விசுவாசித்துப் பின்பற்றுபவர்களை "கல்வினிஸ்டுகள்" என்றும் அழைப்பார்கள்.*

**கல்வினிச ஐங்கோட்பாடுகள்**

1. **மனிதனின் முழுமையான சீரழிவு.**
2. **நிபந்தனையற்ற தெரிந்துகொள்ளல்.**
3. **குறிப்பிட்டவர்களுக்கான மீட்பு அல்லது வரையறுக்கப்பட்ட மீட்பு.**
4. **தவிர்க்க முடியாத அழைப்பு.**
5. **பரிசுத்தவான்களின் விடாமுயற்சி என்பனவாகும்.**

*இவற்றை அவற்றின் முதல் எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆங்கிலத்தில் டுளிப்* (Tulip) *என்றும் அழைப்பார்கள்.*

*இவ்வைங்கோட்பாடுகள் மீட்பையும், இரட்சிப்பையும் குறித்த வேதபோதனைகளை சுருக்கமாக விளக்குவதாக உள்ளன.*